செ.வெ. எண்: 229 நாள்: 26.03.2012

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
## பத்திரிகை செய்தி

2011 ம் ஆண்டு அரசு பொதுத் தேர்வில் 10 மற்றும் 12 ம் வகுப்பில் தேர்ச்சி பெற்று, மாநில அளவில் முதல் மூன்று இடங்கள் பெற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர், மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களுக்கு, இன்று (26.3.2012) சென்னை சேப்பாக்கம், எழிலகம் இணைப்பு கட்டிடத்தில் முதல் மாடியில் உள்ள ஆதி திராவிடர் நல ஆணையர் அலுவலகத்திலுள்ள கூட்ட அரங்கில் நடைபெற்ற பாராட்டு விழா கூட்டத்தில், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. ந. சுப்ரமணியன் அவர்கள் 12–ம் வகுப்பில் மாநில அளவில் முதல் இடம், இரண்டாம் இடம் மற்றும் மூன்றாமிடம் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு முறையே ரூ.50,000/–, ரூ.30,000/– மற்றும் ரூ.20,000/– என 21 மாணவ , மாணவியர்களுக்கும், 10 ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில், மாநில அளவில் முதல் இடம், இரண்டாம் இடம் மற்றும் மூன்றாமிடம் பெற்ற மாணவர்களுக்கு முறையே ரூ.25,000/–, ரூ.20,000/– மற்றும் ரூ.15,000/– என 29 மாணவ, மாணவியர்களுக்கும் சேர்த்து மொத்தம் 50 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.12,40,000/–மற்றும் பாராட்டுச்சான்றிதழுடன் பரிசளித்து சிறப்பித்தார்.

இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலர் திரு. ஆ.சு. ஜீவரத்தினம், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் திரு. பொ.சிவசங்கரன் இ.ஆ.ப., பழங்குடியினர் நலத்துறை இயக்குர் திரு. கெ.வி. கிரிதர் இ.வ.ப. , தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. சி. விஜய ராஜ்குமார், இ.ஆ.ப. மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: –

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.